**In the Court of Judicial Magistrate No.I, Kovilpatti.**

DEPOSITION OF WITNESS

(Chapter XXV, BNSS)

| | | |
|---|---|---|
| Case No. | : | CC No.878/2025 |
| Deposition of witness for Prosecution | : | P.W– 1 |
| Name | : | சதீஸ், 41 |
| Father Name/Husband Name | : | துரைசாமி |
| Village | : | ஆலம்பட்டி |
| Taluk | : | கோவில்பட்டி |
| Calling | : | தலைமை காவலர் |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 09th day of June 2026.

**(Accused absent. 355 BNSS petition filed and allowed).**

**<u>முதல் விசாரணை</u>**

1 நான் தற்போது எப்போதும் வென்றான் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 17.09.2024 ஆம் தேதி கோவில்பட்டி மதுவிலக்கு காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்தபோது காலை 10.30 மணியளவில் நான், சிறப்பு உதவி ஆய்வாளர் செந்தில் ஆறுமுகம் மற்றும் தலைமை காவலர் 1370 தங்கமாரியப்பன் ஆகியோர் சகிதம் ஆய்வாளர் உத்தரவின்படி மேற்படி சிறப்பு உதவி ஆய்வாளருக்கு கிடைத்த ரகசிய தகவலின்படி கோவில்பட்டி கிழக்கு காவல் நிலைய எல்லைக்குட்பட்ட கோவில்பட்டி, எட்டயபுர ரோடு, சண்முகா தியேட்டருக்கு எதிரில் உள்ள குருஞ்சாங்குளம் கம்மாய் அருகே மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளில் கண்காணித்து ரோந்து செய்து வரும்போது கோவில்பட்டி, எட்டயபுர ரோடு, சண்முகா தியட்டர், சுப்பிரமணிபுர ரோடு, ஜங்கஷன் எதிர்புறம் உள்ள கம்மாயில் வைத்து வெள்ளை நிற பிளாஸ்டிக் சாக்குபையுடன் சந்தேகபடியாக நின்று கொண்டிருந்த நபர் போலீஸ் பார்ட்டியாகிய எங்களை கண்டதும் அருகில் வைத்திருந்த வெள்ளை நிற சாக்கு பையினை அங்கேயே வைத்துவிட்டு தப்பிக்க முயன்றவரை மடக்கி பிடித்து விசாரணை செய்தபோது அவர் தனது முகவரியை முன்னுக்கு பின்னாக கூறி பின்னர் சரியான முகவரியை கூறினார். திருப்பதிதாஸ், வயது 26, த.பெ. செல்வராஜ், ஜோதிநகர் 1 வது தெரு, கோவில்பட்டி என்றும், மேலும் அவரது

சாக்குபையில் என்ன இருக்கிறது என்று கேட்டபோது அதில் சுமார் 180 ML அளவு கொண்ட Seemans Brandy பாட்டில்கள் 26 எண்ணம் வைத்திருந்தார்.

2 மேற்படி நபரை விசாரித்தபோது டாஸ்மாக் கடையிலிருந்து பிராந்தி பாட்டிலை வாங்கி அதிக விலைக்கு விற்பதற்காக வைத்திருந்ததாக கூறினார். மேற்படி நபர் சட்ட விரோதமாக மதுபாட்டில்களை விற்க வைத்திருந்த குற்றத்திற்காக மேற்படி சொத்துக்களை அத்தாட்சி பிறப்பித்து கைப்பற்றி, அந்த அத்தாட்சியில் தனிநபர்கள் யாரும் கையொப்பம் செய்ய முன்வராததால் போலீசார் பார்டியாகிய நாங்களே கையொப்பம் செய்தோம். மேற்படி சொத்து சகிதம் எதிரியை கைது செய்து நிலையம் கொண்டு வந்து அன்றைய தினம் காலை 11.30 மணியளவில் நிலைய குற்ற எண். 483/2024 U/s 4(1)(C) TNP Act ஆக வழக்கு பதிவு செய்ய மேற்படி சிறப்பு உதவி ஆய்வாளருக்கு உதவியாக இருந்தேன். அந்த அத்தாட்சியில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையதுதான். **(அந்த கையொப்பம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

3 நாங்கள் ரோந்து சென்றதாக சொல்லப்படும் இடம் கோவில்பட்டி – எட்டயபுரம் மெயின் ரோடு என்றால் சரிதான். அதனால் அங்கு எப்போதும் வாகன போக்குவரத்தும், மக்கள் நடமாட்டமும் அதிகம் இருக்கும் என்றால் சரிதான். நாங்கள் சம்பவ இடத்திற்கு செல்லும் போது 10, 15 நபர்கள் இருந்திருப்பார்களா என்றால் இருந்திருப்பார்கள். அந்த நபர்களை சாட்சியாக விசாரித்தீர்களா என்றால் அழைத்ததற்கு யாரும் முன்வரவில்லை. மேற்படி விவரம் அத்தாட்சியிலோ, எனது வாக்குமூலத்திலோ துலங்குமா என்றால் துலங்காது. சம்பவ இடத்திற்கு நாங்கள் சென்றபோது மது விற்பனை நடைபெற்றிருந்ததாக அத்தாட்சியில் துலங்காது என்றால் சரிதான்.

4 அத்தாட்சி தயார் செய்தவற்கு தனி படிவம் உண்டு என்றால் சரிதான். அந்த அத்தாட்சி படிவத்தை எவ்வளவு நேரம் நிரப்பினீர்கள் என்றால் எனக்கு தெரியாது. நாங்கள் ரோந்து பணி மேற்கொள்ளவில்லை என்பதால்தான் அதுபோன்ற விவரங்கள் எனக்கு தெரியவில்லை என்றால் சரியல்ல. அத்தாட்சி காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. மேல் அதிகாரியின் உத்தரவின் பேரில் புள்ளி விவர கணக்கிற்காக இவ்வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. உண்மையில் வழக்கு சொத்துக்கள் கைப்பற்றபட்டிருந்தால் எங்கு வைத்து கைப்பற்றபட்டது என்று குறிப்பிட்டு சொல்லியிருப்போம் என்றாலும், தனிநபர்களிடம் சாட்சி கையொப்பம் பெற்றிருப்போம் என்றாலும் சரியல்ல. வழக்கு சொத்துக்கள் காவல் நிலையத்தில் ஏற்கனவே இருப்பு வைக்கப்பட்டது என்றால் சரியல்ல.

5 உதவி ஆய்வாளர் கேட்டுக் கொண்டதன் பேரில் வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நாங்கள் சம்பவ இடத்திற்கு சென்றபோது மது விற்பனை நடந்து கொண்டிருந்ததாக அத்தாட்சியில் துலங்காது என்றால் சரிதான். நான் சொன்னது போல் சொன்ன நேரத்தில் எதிரியிடம் வழக்கு சொத்துக்கள் கைப்பற்றபடவில்லை என்றாலும், புள்ளி விவர கணக்கிற்காக எதிரி மீது பொய் வழக்கு பதிவு செய்யபட்டது என்றாலும், எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் சம்பந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Taken before me in open court in the presence of accused and read over to the witness and acknowledged by him/her to be Correct.

Sd/ Tr. K. Anand, B.A, M.L.,
Judicial Magistrate No.1,
Kovilpatti.